# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

O.S.No.65/2021

**CNR.No.TNCB19000**

Date,19.08.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | குள்ளையன் | **வயது** | 64 |
| த/பெ | பத்திரப்ப கவுண்டர் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | ராமேகவுண்டன்புதூர் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 19th August 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கு சொத்தும் மற்ற சொத்தும் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனது தாத்தா மற்றும் அப்பா வாங்கிய சொத்துக்கள் ஆகும். அந்த சொத்துக்களை எனது தகப்பனாரும் அவரது சகோதர சகோதரிகளும் நானும் வா.சா. ஆ 1 ன்படி பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். வா.சா. ஆ 1 ன் இரண்டாவது பக்கத்தில் 15-வது வரியில் இதன் அடியில் கண்ட இ ஷெட்யூல் பிராபர்ட்டி 5 இலக்கமிட்ட குள்ளையன் சர்வ சுதந்திரமாக அடைந்து கொள்ள வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகப்பிரிவினை செய்து 30 வருடம் ஆகிறது என்றால் சரிதான். பாகப்பிரிவினையை பொருத்து செல்லாது என எனது மகனோ மகளோ வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் எனது மகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

எனது மகள் தாக்கல் செய்துள்ள வழக்கின் வழக்கு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நான் 1ம் பிரதிவாதிக்கு தெரிந்தே கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. இந்த விபரம் எனது மகன் மற்றும் மகளுக்கு தெரியும் என்றால் மகளுக்கு நான் சொன்ன பிறகு தெரியும். பாகப்பிரிவினைப்படி நான் சர்வ

சுதந்திரமாக அனுபவித்து வருவதால் எனது மகனுக்கோ மகளுக்கோ பாத்தியதை கிடையாது என்றால் சரியல்ல. 06.05.1996 ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரத்தின் படி வழக்கு சொத்து எனக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனக்கு மட்டும்தான் பாத்தியப்பட்டது என்பதால் எனது மகனும் மகளும் பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. தாத்தா சொத்தில் அவர்களுக்கும் பாகம் உண்டு. வா.சா. ஆ 4 ன்படி 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்து விட்டேன் என்றும் தற்போது தாவா சொத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.08.19 19:37:27 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.